IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.218/2022
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி ஜெயலெட்சுமி க.பெ.ரவிச்சந்திரன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 28.4.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவா சொத்து வாதியின் தாத்தா, பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, வாதியின் பாட்டிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தாகும். வழக்குச் சொத்தில் வாதியின் தாத்தாவிற்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தானது வாதியின் தாத்தா, பாட்டிக்கு 22.08.1990ல் பதிவு செய்யப்பட்ட பதிவுகிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, எனது மாமியார் மற்றும் வாதியின் பாட்டியின் உழைப்பின்மூலம் மட்டுமே வழக்குச் சொத்து கிரையம் பெறப்பட்டது. எனது மாமனார் எனது மாமியாரின் கணவர் என்ற முறையில் எனது மாமியார் அவர் பெயரை பெயரளவில் கிரைய ஆவணத்தில் சேர்த்துக்கொண்டுள்ளார். வழக்குச் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. வாதியின் தாத்தா பாட்டி உயிருடன் இருந்த காலத்தில் அவர்கள் இருவர் பெயரில் இருந்து கூட்டுச்சொத்தில் பகுதிபங்கை தனது மனைவிக்கு பதிவு ஆவணம் மூலம் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கை பற்றிய விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதியின் தாத்தா, பாட்டி இருவர் பெயரில் பதிவு

பத்திரம் வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்டதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பகுதி கிரைய ஆவணம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது மாமியார், மாமனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரவிச்சந்திரன், இரமேஷ்பாபு என்ற இரண்டு ஆண்மக்கள் ஆவார்கள். எனது கணவர் யார் என்றால் இரவிச்சந்திரன் ஆவார். இரமேஷ்பாபு எனது கணவர் பெயர் என்றால் சரிதான். மேற்படி இரமேஷ்பாபுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3பிள்ளைகள் ஆவார்கள். வாதியின் அம்மா பெயர் என்ன என்றால் முத்துலட்சுமி ஆகும்.

4. மேற்படி முத்துலட்சுமிக்கும், இரவிச்சந்திரனுக்கும் பிறந்தவர்தான் வாதி என்றால் சரிதான். நான் வாதியையும், வாதியின் தாயாரையும் கொடுமை செய்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் மாமியாருக்கு கொடுத்த சொத்தை எனது கணவருக்கு எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, எனது மாமியாருக்கு கிடைக்கப்பெற்றதை கிரையமாக பெற்றுள்ளோம். எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தின் பாதிபங்கை யாருக்கும் கொடுக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

5. வாதியின் தாத்தா, பாட்டி பெயர்களில் உள்ள கூட்டுக்கிரையப்பத்திரத்தில் வாதியின் தாத்தா பெயரானது பெயளரவில் உள்ளது என்பதை நிரூபணம் செய்யும் விதமாக எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், இரவிச்சந்திரனும் கிரையம் பெற்ற ஆவணத்தில் வாய்கிரலாக பாகம் பிரித்துக்கொண்டதின் அடிப்படையில் கிரையம் பெற்றதாக நான் கூறியுள்ளது தவறு என்றாலும்,

அவ்வாறான பாகம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி பாகம் ஏற்படாத நிலையில் நாங்கள் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

6. இரவிச்சந்திரன் மனைவி தற்போது தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல, வேறு திருமணம் செய்து கொண்டார். மேற்படி வேறு திருமணம் செய்து கொண்டதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நான் உருவாக்கிய ஆவணங்கள் அனைத்தும் மோசடியானது என்றால் சரியல்ல. வாதியுடன் வாய்கிரலாக பாகம் ஏற்பட்டது என்றுகூறி நான்தாக்கல் செய்துள்ள ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு தேவையற்றது என்றால் சரியல்ல. வாதி அவரது தாத்தா பங்கை பலமுறை என்னிடமும், இரவிச்சந்திரனிடமும் சட்டப்படியான பாகம் கேட்டார் என்றால் சரியல்ல. நான் மேலும் மேலும் வில்லங்கம் செய்ய முயற்சித்ததால் வாதியின் பங்கைபெற தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இரவிச்சந்திரனின் மனைவி எனக்கூறி வழக்கை நடத்த எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

8. வழக்குச் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியின் தந்தையை கணவர் என கைவசப்படுத்திக்கொண்டு சொத்தை அபகரித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தாத்தா சொத்தில் உள்ள பங்கில் வாதிக்கு சட்டப்படி பங்குரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரும் அனைத்து பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விபரம் எதுவும் தெரியாமல் சொத்தை

அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. பொய்யான விபரங்களை கூறி எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.29 11:38:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.